**5 திருமணப் படலம்**

தடாகைப்பிரட்டியார் மனுநூலில் உரைத்தப்படி நல்லாட்சி செய்து வந்தாள். அவள் திருமணப் பருவம் அடைந்ததும் அவள் தாய் காஞ்சனமாலை கவலைக் கொண்டாள். தகுந்த காலம் வரும் போது திருமணம் தானே நடக்கும் என்று தாயிற்கு நல்ல வார்த்தைக் கூறி தன் திக்விஜயத்தை தொடங்கினாள். தன் படையுடன் எல்லாத் திக்கிற்கும் சென்று வென்று, தேவலோகம் உள்ளிட்ட எல்லா இடங்களையும் வென்று கையிலாயம் அடைந்தாள்.

கையிலாயம் அவள் வந்ததை சிவகணங்கள் நந்தி தேவரிடம் கூறினர். நந்தி சிவகணங்களை தடாகைப்பிரட்டியாரிடம் போரிடுமாறு கூறினார். அவளிடம் சிவகணங்கள் தோற்றன. நந்தி தேவர் சிவபிரானிடம் நடந்தவற்றைக் கூற சிவபெருமானே போர்களம் அடைந்தார். அங்கு பிராட்டியார் பெருமானைக் கண்டாள். அவள் உள்ளத்தில் நாணம் மேலிட அவள் மூன்றாம் தனமும் மறைந்து. அச்சமயம் மந்திரி சுமதி அசரீரியின் வாக்கினை நினைவுக் கூர்ந்தார்.

உடனே அம்மைக்கு அவரே தன் மணாளன் என்பதை உணர்ந்தாள். சோமவாரத்தில் நல்ல முகூர்த்தத்தில் மதுரையில் அவளை மணமுடிப்பதாகக் கூறினார் ஐயன். குறித்த நன்னாளில் திருமால், ப்ரம்மா மற்றும் முப்பத்து முக்கோடி தேவர்களுடன் மதுரை மாநகர் அடைந்தார். அச்சமயம் காஞ்சனமாலை பெருமானை அடைந்து தடாதகைப் பிராட்டியாரை மணப்பதுடன் பாண்டிய நாட்டையும் ஆள வேண்டும் என விண்ணப்பித்தாள்.

பொன்னாலும் மணியாலும் அலங்கரிக்கப்பட்ட மணி மண்டபத்தில் **ப்ரம்மா** தீ வளர்த்து நான்கு வேதங்கள் ஓத, வேத முறைப்படி சடங்குகளை செய்து வைத்தார். சங்கங்கள் முழங்க முரசுகள் ஒலிக்க திருமால் நீர்வார்த்து பிராட்டியாரை பெருமானுக்கு தாரை வார்த்துக் கொடுத்தார். சிவபெருமான் தடாகைப்பிரட்டியாருக்கு மங்கல நாணைப் பூட்டினார்.

**சுந்தரபாண்டியன்** என்ற பெயர் கொண்டு சிவபெருமான் மதுரை நகரை அரசாண்டார்

**பல்லவி**
உலகம் யாவையும் வென்று உந்தன்
கயிலை வந்த டைந்தாள் தடாதகை
**அனுபல்லவி**
மலர்ந்த முகத்துடன் வந்த உன்னைக் கண்டதும்
மங்கை கொங்கை மறைந்த மர்மம்கண்டாள் மந்திரி சுமதி

**சரணம்**
காஞ்சனமாலை தன் பெண்ணையும் மதுரை
மண்ணையும் ஏற்கச் சொல்லி உன்னை இறைஞ்ச
வாஞ்சையாய் திருமாலும் தாரை வார்க்கத் திரு
மாங்கல்ய தாரணம் செய்தாய் தடாதகைக்கு